(ச) ''மாநில மின்சுமை பகுப்பு மையம்'' என்பது, இந்தச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி நிறுவப்பட்ட மாநில மின்சுமை பகுப்பு மையம் என்று பொருள்படும்;

(2) ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறை எதற்கும், பிற ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகள் அல்லது ஆணை எதற்கும் முரண்பாடு இருக்கும் பட்சத்தில், இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளே மேலோங்கி நிற்கும்.

**4. ஒழுங்குமுறை விதிகளுக்கான பொருள்கோள்:–**

சூழ்நிலை வேறு பொருள் குறித்தாலன்றி இந்த ஒழுங்குமுறை விதிகளுக்கான பொருள்கோள்:

(1) இந்த ஒழுங்குமுறை விதிகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் இதில் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால் இந்தச் சட்டத்தில் அல்லது விதிகளில் இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு அல்லது ஆணையத்தில் ஒழுங்குமுறைவிதிகளில் பொருள் வரையறை செய்யப்பட்ட சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் இந்தச் சட்டத்தின் அல்லது விதிகளின் இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு அல்லது நேர்வுக்கேற்ப ஆணையத்தினால் அறிவிக்கப்பட்ட பிற ஒழுங்குமுறை விதிகளின்படி அவற்றிற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருள்களை கொண்டதாகும்.

(2) இந்த ஒழுங்குமுறைவிதிகளின் மற்றும் ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிற ஒழுங்குமுறை விதிகள் அல்லது ஆணை எதற்குமிடையே முரண்பாடு இருக்கும் பட்சத்தில், முதன்மை இணக்கமான பொருள் கோள் மீண்டும் நிலைநாட்டப்படும். இணக்கமான பொருள்கோள் நிலை கொண்டு வர இயலாது போகும் நேரில், மற்றும் முரண்பாடு இன்னும் விடாப்பிடியாக இருக்கும் நேரில் இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகள் மேலோங்கி நிற்கும்.

(3) அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டவாறான 1897 ஆம் ஆண்டு பொது வகைமுறைகள் சட்டம் (10/1897) நாடாளுமன்ற சட்டத்தின் பொருள்கோளுக்கு இது பொருந்துவர போன்றே இந்த வகைமுறைகளின் பொருள்களுக்கும் பொருந்தும்.

**5. நோக்கம்:**

(1) மாநிலத்திற்கிடையில் மின் செலுத்துதலுக்கு இடை விளைவாக எழுகிற மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்புமுறை (INSTS) அல்லது மின் பகிர்மான அமைப்புமுறை பயன்பாட்டிற்காக படிம எரிபொருள் அல்லாத அடிப்படையில்

குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரம் உள்ளடங்கலான இந்த ஒழுங்குமுறை விதிகளின் 3 ஆம் உள் ஒழுங்குமுறை விதியின் (1) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின் (1) ஆம் கூறின் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான பசுமை மின்னாற்றல் மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு பசுமை திறந்த நுழைவுரிமையை அனுமதியளிப்பதற்கும் பொருந்தத்தக்கதாகும்.

(2) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கு விண்ணப்பப்பதிற்கான தகுதியுடமைக்குரிய அளவுகோல், பசுமை மின்னாற்றலை அனுமதிப்பதற்கான தகுதியுடைமை பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களால் மனநிறைவடைய வேண்டிய நிபந்தனைகள், திறந்த நுழைவுரிமையில் வகைப்படுத்துதல் முதலியன நீங்கலாக 2014 ஆம் ஆண்டு ஆணையத்தின் மின்கட்டமைப்பு இணைத்திறம் மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகள் மற்றும் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அதன்பேரில் பிறப்பிக்கப்படும் திருத்தங்களின்படி இருத்தல் வேண்டும்.

**6. ஒருங்கிணைப்பு முகமை:**

(1) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை தொடர்பான விண்ணப்பங்கள் அனைத்தும் மத்திய ஒருங்கிணைப்பு முகமையின் நிறுவப்பட்ட கொண்டு செல்லும் அமைப்பிற்கு அனுப்பப்படுதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் மத்திய ஒருங்கிணைப்பு முகமையினால், மாநில ஒருங்கிணைப்பு முகமை வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை ஒப்புதலளிப்பதில் ஏற்படும் கால தாழ்வினை தவிர்க்கும் பொருட்டு, மாநிலத்திற்குள்ளான நடவடிக்கை பொறுத்து நிகழ்நிலை நுழைவாயில் மூலம் மாநில ஒருங்கிணைப்பு முகமைக்கு, பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கான விண்ணப்பங்கள் நேரடியாகவும் கூட அனுப்பி வைக்கப்படக்கூடும்.

மேலும் வரம்புரையாக, அதுவரையிலும் மத்திய ஒருங்கிணைப்பு முகமை (CNA) யினால் நடைமுறை மற்றும் படிவங்கள் புதியதாக உருவாக்கப்படும் வரை, இந்த விஷயத்தில் தமிழ்நாடு மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையத்தினால் விதித்தமைக்கபட்டு இருந்து வரும் நடைமுறை/படிவங்கள் பின்பற்றப்படலாம்.

(2) தமிழ்நாடு மின்சுமை பகிர்ந்தனுப்பு மையம், குறுகியகால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வழங்குவதற்கான மாநில ஒருங்கிணைப்பு மையமாக இயங்கும் மற்றும் மாநில மின் செலுத்தல் மின் பணி நிறுவனம் (STU), நீண்ட கால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையையும், நடுத்தரகால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையையும் வழங்குவதற்கான மாநில ஒருங்கிணைப்பு முகமையாக இருக்கும் திறந்த நுழைவுரிமை எதுவும் மின்பகிர்மான உரிமம்தாரரிடமிருந்து இசைவு பெறாமல், மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையத்தினால் மாநில மின் செலுத்தல் மின்பணி நிறுவனத்தினால் அனுமதியளிக்கப்படுதல் ஆகாது.

(3) மாநில ஒருங்கிணைப்பு முகமையானது, மாநில மின்செலுத்தல் மின்பணி நிறுவனம், மின்செலுத்தல் உரிமதாரர்கள் மற்றும் மின்பகிர்மான உரிமதாரர்கள், மத்திய ஒருங்கிணைப்பு முகமையின் மற்றும் மாநில ஒருங்கிணைப்பு முகமையின் நுழைவாயில்கள் மூலம் தரவுகள் பொதுமக்களுக்கு பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை பொறுத்த தொடர்புடைய தகவல் அனைத்தும் கிடைக்கத்தக்கதாக செய்தல் வேண்டும்.

**7. பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கு அனுமதி அளிப்பதற்கான அளவுகோல்:**

(1) நீண்ட கால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையானது மாநில மின் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்ட மின்செலுத்தல் திட்ட அளவுகோல் மற்றும் மின்பகிர்மான திட்ட விதித்தொகுப்பிற்கு இணங்க அனுமதியளிக்கப்படுதல் வேண்டும்.

(2) குறுகிய கால/நடுத்தர கால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையானது,–

(அ) இயல்பான செயல்திட்டத்திற்கு மேற்பட்ட அளவுகள்;

(ஆ) மின்னோட்டத்தில் ஏற்படும் வேறுபாட்டின் பொருட்டு கிடைக்கக்கூடிய மிகை அளவுகள்;

(இ) எதிர்கால மின்சுமை வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்வதற்கு உருவாக்கப்பட்ட, உட்கட்டமைப்பு மின் செலுத்தல் அமைப்பு முறையின், மின்உற்பத்தி திறன் மற்றும்/அல்லது மின்பகிர்மான அமைப்பு முறையின் மின்உற்பத்தி திறன் பொருட்டு கிடைக்கக்கூடிய மிகை அளவுகள் ஆகியவற்றை பயன்படுத்துவதன் மூலம், அந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுமானால் அனுமதியளிக்கப்படுதல் வேண்டும்.

(3) திறந்த நுழைவுரிமையைக் கோரும் மின் உற்பத்தியாளர் பகுதியில், அதோடு கூட்ட மின்நுகர்வோர் பகுதியில் தேவையான தொடர்பு வசதிகளுடன் இடைமுக மின்னளவி நிறுவப்படுகையில், 2006 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு மின்னளவி நிறுவுகை மற்றும் இயக்க ஒழுங்குமுறை விதிகளின் மற்றும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் திருத்தங்களின்படி நிறுவப்படுதல் வேண்டும்.

(4) பிற தகுதியுடமையின் அளவுகோல் திருப்தியடைய வேண்டிய நிபந்தனைகள் உரிமம்தாரர் மாநில ஒருங்கிணைப்பு முகமையின் மின் நுகர்வோரால் கொடுக்கப்பட வேண்டியதாக நிலுவையிலிருக்கிற தொகைகள், 2014 ஆம் ஆண்டு ஆணையத்தின் மின் கட்டமைப்பு இணைப்பு மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகளின்படி இருத்தல் வேண்டும்.

**8. தற்போதுள்ள உறுப்பு நிறுவனங்களின் செயற்பாடு:**

தற்போதுள்ள மின் மின்நுகர்வோர்/மின் உற்பத்தியாளர்கள் அந்த உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்கு தற்போதுள்ள உடன்பாடுகளின் படி, திறந்த நுழைவுரிமையின் கீழ் புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் (RE) தொடர்ந்து பயன்படுத்தலாம்.

வரம்புரையாக, தற்போதுள்ள நுகர்வோரால்/மின்உற்பத்தியாளர்களால் அவ்வப்போது அந்தந்த உடன்படிக்கைகளில் குறித்து ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படலாகும் கட்டணங்கள் தொடர்ந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, அத்தகைய தற்போதுள்ள மின் நுகர்வோர்கள்/மின் உற்பத்தியாளர்கள் பொறுத்து பிந்தைய கால அளவிற்கான பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையானது, இந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

இன்னும் வரம்புரையாக, திறந்த நுழைவுரிமையின்படி ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட மின்திறனுக்கும் கூடுதலாக அத்தகைய தற்போதுள்ள மின்நுகர்வோரால் / மின்உற்பத்தியாளர்களால் நாடிச் செல்லும் கூடுதல் புதுப்பிக்கத்தக்க மின்னாற்றலுக்குப் பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை கூடுதலாக இருக்குமானால், நாடக்கூடிய கூடுதல் மின்திறன் அளவுக்கு திறந்த நுழைவுரிமைக்கான புதிய விண்ணப்பமாக பாவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய கூடுதல் மின்திறன் இந்த ஒழுங்குமுறை விதிகளால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**9. முன்னுரிமை ஒதுக்கீடு:**

(1) மின்பகிர்மான உரிமம்தாரர் பிற பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களைவிட மிகைப்படியான உயர்ந்தளவு முன்னுரிமை உடையவராவர்.

(2) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள், திறந்த நுழைவுரிமையின் அதேவகையான வழக்கமான திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களைவிட மிகைப்படியான முன்னுரிமை உடையவராவர்.

(3) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கிடையே, நீண்டகால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள், நடுத்தர கால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களால் பின்பற்றப்படும் முன்னுரிமை உடையவராவர் மற்றும் பிந்திய குறுகிய கால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் கிடைக்கக் கூடிய மிகையான மின் செலுத்துதல்/மின்பகிர்மான அமைப்பு முறை மின் திறனின் மிகையளவிற்கு உட்பட்டு குறுகிய கால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

வரம்புரையாக, பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கு அனுமதியளிக்கும் முடிவானது முதலில் வருபவர்களுக்கு முதலில் வழங்குதல் என்ற அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

**10. பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையை வகைப்படுத்துதல்:**

பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள், மாநிலத்திற்குள் மின் செலுத்தல் மற்றும்/அல்லது மின்பகிர்மான அமைப்பு முறையும் பயன்பாட்டு கால அளவின் அடிப்படையில் பின்வரும் வகையினர்களாக வகைப்படுத்தப்படுவர்.

(i) ''நீண்டகால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை'' என்பது மாநிலத்திற்குள் மின் செலுத்தல் அமைப்பு முறையை மற்றும்/அல்லது மின்பகிர்மான அமைப்பு முறையை, 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, ஆனால் 25 ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவிற்கு பயன்படுத்துவதற்கான உரிமை என்று பொருள்படும்;

(ii) ''நடுத்தரக் கால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை'' என்பது, மாநிலத்திற்குள் மின்செலுத்தல் அமைப்பு முறையை மற்றும்/ அல்லது மின்பகிர்மான அமைப்பு முறையை மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட, ஆனால், மூன்றாண்டுகளுக்கு மேற்படாத கால அளவிற்கு பயன்படுத்துவதற்கான உரிமை என்று பொருள்படும்;

(iii) ''குறுகியகால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை'' என்பது, ஒரே நேரத்தில் ஒரு மாதக் கால அளவிற்கான திறந்த நுழைவுரிமை என்று பொருள்படும்;

வரம்புரையாக, வழங்கப்பட்ட குறுகியகால பசுமை திறந்த நுழைவுரிமைக் காலம், காலாவதியாவதன் பேரில், அத்தகைய மின் நுகர்வோர் / மின் வாடிக்கையாளர், மேலுமான கால அளவிற்கு குறுகியகால பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையை விரும்புவாரானால், அது அத்தகைய கால அளவிற்கான விண்ணப்பத்தினை தாக்கல் செய்யுமாறு கோரப்படுவர் மற்றும் அத்தகைய விண்ணப்பம் புதிய விண்ணப்பம் போன்று கருதப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விண்ணப்பத் தேதியின் அடிப்படையில் முன்னுரிமை நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

**11. பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கான விண்ணப்பம்:**

(1) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் இந்த ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க ஒருங்கிணைப்பு முகமைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**12. பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியுடன்மைக்கான அளவுகோல்:**

(1) இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைகளுக்கு மற்றும் கிடைக்கக்கூடிய அமைப்பு முறைக்கு உட்பட்டு மின்நுகர்வோர்கள், வணிகர்கள், மின்பகிர்மான உரிமம்தாரர்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்உற்பத்தி நிறுவனங்கள் ஆகியோர் மாநிலத்திற்குள் மாநில மின் செலுத்தல், மின்பணி நிறுவனம் அல்லது மின்செலுத்தல் உரிமம்தாரர்கள் மற்றும்/ அல்லது மின்பகிர்மான உரிமதாரரின் மின்பகிர்மான அமைப்புமுறை எதனின் மாநிலத்திற்குள் மின்பகிர்மான அமைப்பு முறையின் பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கு தகுதியுடையவராவர்.

வரம்புரையாக, திறந்த நுழைவுரிமை, மின்வழங்கல் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 63 கிலோவாட் மற்றும் அதற்கு மேலுமான குறைந்தபட்ச ஒப்பந்தம் செய்யப்பட்ட மின்தேவை அதிர்உயர்அழுத்த மற்றும் உயரழுத்த மின்நுகர்வோர் அனைவருக்கும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) நபர் ஒவ்வொருவரும் இந்தச் சட்டத்தின்படி வனையப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அவ்வப்போது வெளியிடப்படும் பொருளின் பேரில் ஆணையத்தின் ஆணைகள் மற்றும் பணிப்புரைகளுடன் சேர்த்து படிக்கப்படும், இந்தச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் வகைமுறைகளின்படி திறந்த நுழைவுரிமைக்கு உரிமையுடையவராவர்.

**13. மின்னாற்றல் கணக்கீடு மற்றும் பட்டியலிடல்:**

(1) மின்மாற்றல் கணக்கீடு இயக்கத் தேதியினை பொருட்படுத்தாமலேயே புதுப்பிக்கத்தக்க மின்மாற்றல் மின் உற்பத்தியாளர்கள் அனைவரையும் பொறுத்து மின்னாற்றல் கணக்கு வைப்பு செய்யப்படும் பொருட்டு, திறந்து நுழைவுரிமைக்கு 15 நிமிடங்கள் கால தொகுதியாக (Block) இருத்தல் வேண்டும். அந்தந்த 15 நிமிடங்கள் நேரம் கால தொகுதி செய்யப்படுவதன் அடிப்படையில் சரி கட்டலுக்கு பின்பு கிடைக்கக்கூடிய உபரி மின்னாற்றல் ஏதேனுமிருப்பின், அது, மின் வழங்கல் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மின் நுகர்வோருக்கு பொருந்தக்கூடிய மின்கட்டணத்தில் உள்ள படியே உட்செலுத்தப்பட்ட மின்னாற்றலுக்கு கூடுதலாக வங்கி கட்டணங்கள் மற்றும் மிகையான மின் நுகர்வுடன் சேர்த்து சேமிக்கப்பட்ட மின்னாற்றலாக கருதப்படுதல் வேண்டும். சேமிப்பு மற்றும் எடுக்கப்படும் மின்னாற்றல் பட்டியலிடல் சுழற்சி முழுவதற்கும் அனுமதி அளிக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, வழக்கமான கால தொகுதியின் போது (Block) உற்பத்தி செய்யப்படும் சேமிக்கப்பட்ட மின்னாற்றல் மின்நுகர்வு வழக்கமான தொகுதிக்கு எதிராக சரிக்கட்டப்படும் மற்றும் இரவு/ உச்சநேர முறிவு தொகுதியின் (மின்நுகர்வுக்கு எதிராக) போது உற்பத்தி செய்யப்படும் சேமிப்பு, இரவு/உச்சநேர முறிவு தொகுதிக்கு எதிராக சரிகட்டப்படும் மற்றும் உச்சநேர கால தொகுதியின்போது உற்பத்தி செய்யப்பட்ட சேமிப்பு மின்னாற்றல், எந்த தொகுதியிலும் மின் நுகர்வுக்கு எதிராக சரிக்கட்டப்படும்.

(2) சூரிய சக்தி காற்றாலை மற்றும் சூரிய சக்தி காற்றாலை கலப்பின மின் உற்பத்தியாளர்கள் பொறுத்த உட்செலுத்தப்படும் மின்னாற்றல் மற்றும் மாறுபாடு கட்டணங்கள் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின்உற்பத்திக்கான முன்கணித்தல், திட்டமிடல் மற்றும் விலக்கத் தீர்வு மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறை விதிகள் மற்றும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் திருத்தங்களின் படி இருத்தல் வேண்டும். ஆகையால் பசுமை மின்னாற்றல் மின்உற்பத்தியாளர்கள் (RE generation) சூரிய மின்சக்தி. காற்றாலை மற்றும் காற்றாலை சூரிய மின்சக்தி கலப்பின் மின் உற்பத்தியாளர்கள் அல்லாத பிற 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (விலக்கத் தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறைவிதிகளில் மற்றும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் திருத்தங்களில் கட்டுப்படுத்தல் வேண்டும். விசைக்குழாய் மூலம் தேக்கி வைக்கப்படும் மின் நிலையங்கள் உள்ளடங்கலான நீர்மின்உற்பத்தி நிலையங்கள், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (விலக்கத் தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறை விதிகளின்படி மாறுபாட்டு தீர்வு செயலமைப்புத் திட்ட உள்ளீட்டெல்லையின்படி தொடர்ந்து விதிவிலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**14. மின்னிழப்புகள்:**

மின்சாரம் கொண்டு செலுத்துதலுக்கான மின் இழப்புகள் ஆணையத்தின் தொடர்புடைய மின் கட்டண ஆணைப்படி சரிக்கட்டப்படுதல் வேண்டும்.

**15. பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை:**

பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கான கட்டணங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்

1. மின் செலுத்தல் கட்டணங்கள்,
2. மின்சாரம் கொண்டு செல்லுதல் கட்டணங்கள்,
3. குறுக்கு உதவித் தொகை உபரிக் கட்டணம்,
4. கூடுதல் உபரிக் கட்டணம்
5. மின்சேமிப்பு வைப்பக கட்டணங்கள்
6. இணையான மின் கட்டணங்கள்
7. எதிர் வினைபுரி மின்னாற்றல் கட்டணங்கள், எவையேனுமிருப்பின், அவை,

8. மாநில மின் பகிர்ந்தனுப்பு மைய கட்டணங்கள், மின்உற்பத்தித் திட்டமிடல் மற்றும் அமைப்பு முறை இயக்கக் கட்டணங்கள், மாறுபாட்டுத் தீர்வு கட்டணங்கள், முதலியவை போன்ற பிற கட்டணங்கள் மற்றும் செலவீடுகள்;

வரம்புரையாக, மின் சேமிப்பிற்கான கட்டணங்கள் நீங்களாக சலுகை உள்ளடங்கலான மேலேயுள்ள செலவீடுகள் ஆணையத்தின் தொடர்புடைய ஆணைகள் ஒழுங்குமுறை விதிகளின்படி இருக்கும்.

மேலும் வரம்புரையாக மாநிலங்களுக்கிடையேயான நடவடிக்கை / மின் பரிமாற்றம் மூலமாக பசுமை மின்னாற்றலை பெறுகிற பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் முறையே மாநிலத்திற்குள் மின் நடவடிக்கை மின்னமைப்பு/மின் பகிர்மான மின்னமைப்பை பயன்படுத்துவதற்கான சலுகைக் கட்டணங்கள் எவற்றிற்கும் தகுதியுடையவராக மாட்டார்.

**16. மின் சேமிப்பு வைப்பக வசதிகள் மற்றும் கட்டணங்கள்:**

(1) மின் சேமிப்பு வைப்பக வசதியானது கிடைக்கக்கூடிய மாநிலத்திற்குள் பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையை மின்நுகர்வோருக்கு வழங்குதல் வேண்டும். பசுமை மின்னாற்றல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பெறப்படும் உபரி மின்னாற்றலைச் சரிக்கட்டு செய்த பின்பு, மின் பகிர்மான உரிமம்தாரிடம் சேமித்து வைக்கப்படுதல் வேண்டும். மூன்றாம் தரப்பினரின் மின் கொள்முதல்/மின் விற்பனைக்கான சேமிப்பு வைப்பு வைப்பதற்கான வசதி எதுவும் கிடையாது.

(2) இந்த ஒழுங்குமுறை விதிகளின் நோக்கத்திற்காக பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களால், சேமிப்பு மின்னாற்றல் மின் பகிர்மான உரிமதாரர்களுக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களால், மின்பகிர்மான உரிமதாரருக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்குரிய கட்டணங்களுடன் சேர்த்து வழங்கப்படுதல் வேண்டும்.

(3) சேமிக்கப்படும் மின்னாற்றல் 15 நிமிடங்கள் கால தொகுதி அடிப்படையில் மின்னாற்றல் கணக்கிடுவதற்காக கணக்கிடப்படுதல் வேண்டும். மின் நுகர்வு முனையத்தில் கிடைக்கக்கூடிய பசுமை மின்னாற்றல் மின் உற்பத்தியாளரிடமிருந்து உட்செலுத்தப்பட்ட மின்னாற்றல் மற்றும் அதே 15 நிமிடங்கள் கால தொகுதி அளவு அடிப்படையில் மின் நுகர்வோரின் மின்நுகர்விற்குமிடையேயான வேறுபாடு சேமிக்கப்பட்ட மின்னாற்றலாக கருதப்படுதல் வேண்டும், மற்றும் இந்த சேமிக்கப்பட்ட மின்னாற்றல் இந்த ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்ட சேமிப்பு சுழற்சி அடிப்படையில் நுகரப்படுவதற்கு அனுமதியளிக்கப்படுதல் வேண்டும்.

(4) மின் சேமிப்பு வைப்பக கட்டணங்கள் சேமிக்கப்பட்ட மின்னாற்றலின் 8% வகையில் சரிக்கட்டப்படுதல் வேண்டும்.

(5) பசுமை மின்னாற்றலின் சேமிப்பு, ஆங்கில மாதத்தில் திறந்த நுழைவுரிமை மின் நுகர்வோரின் பட்டியலின் சுழற்சி அடிப்படையில் மட்டுமே அனுமதிக்கப்படுதல் வேண்டும். சேமிக்கப்பட்ட மின்னாற்றல் அதே பட்டியல் சுழற்சிக்குள் பயன்படுத்துதல் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, சேமிக்கப்பட்ட மின்னாற்றலுக்கான வரவு, பிந்திய பட்டியல்களுக்காக முன் கொண்டு போவதற்கு அனுமதியளிக்கப்படுதல் ஆகாது. பட்டியலிடல் சூழற்சியின் போது சேமிக்கப்பட்ட மின் ஆற்றலுக்கான வரவு அந்தந்த கால தொகுதியில் உட்செலுத்தப்பட்ட மின்னாற்றலின்படி அதே பட்டியலிடல் சுழற்சியின் போது சரிக் கட்டப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, வழக்கமான அல்லது புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் நிறுமத்திட்டத்தின்படி 31–03–2018 அன்று அல்லது அதற்கு முன்பு தொடங்கப்பட்ட காற்றாலை மின்னாற்றல் மின் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரை மின் சேமிப்பு அதாவது ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையிலான 12 மாதங்கள் கால அளவு அதாவது 14% வகையில் முந்திய மின்கட்டண ஆணைகளில் முடிவு செய்யப்பட்டவரான பொருந்தக்கூடிய மின் சேமிப்புக் கட்டணங்கள் சேர்த்து தொடர்ந்து அனுமதியாக்கப்படுதல் வேண்டும்.

(6) மின் சேமிப்புக் கால அளவின் முடிவில் பயன்படுத்தப்படாத உபரியான சேமிப்பு மின்னாற்றல், ஆணையத்தின் ஆணைகளின்படி பொருந்தக்கூடிய அந்தந்த புதுப்பிக்கத்தக்க மின் கட்டணங்களில் 75% வீதத்தில் மற்றும் மின் கட்டணம் எதுவும் நிர்ணயிக்கப்படாதவிடத்து, சுய உபயோகிப்பாளர்களுக்கு அண்மைகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஏலம் கேட்கப்பட்ட மின் கட்டணத்தில் 75% விழுக்காட்டில் மின் பகிர்மான உரிம தாரர்களுக்கு விற்கப்படுதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மின் கட்டணங்கள், ஏல நடவடிக்கைகள் மூலம் கண்டுபிடிக்கப்படுமானால், எடையிடப்பட்ட சராசரி (weighted average) மின்கட்டணம் செலுத்துகைக்கு ஏற்கத்தக்கதாகும். புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் சான்றிதழ் திட்டத்தின்படி சுயஉபயோக மின் உற்பத்தியாளர்களக்காக மாதக்கடைசியில் மிகையான மின்உற்பத்தி/பயன்படுத்தப்படாத சேமிக்கப்பட்ட மின்னாற்றலானது,—

(i) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறை விதிகளின்படி, ஆணையத்தினால் அறிவிக்கப்பட்ட அந்தந்த நிதியாண்டிற்கான ஒருங்கிணைந்த மின்கொள்முதல் விலை அல்லது

(ii) ஒருங்கிணைந்த மின்கொள்முதல் விலை தொடங்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டங்களின் போது அந்தந்த கட்டுப்பாட்டு கால அளவிற்கு, ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமை மின் கட்டணமானது, இதில் எது குறைந்ததோ, அது 75% வீதத்தில் பணமாக்கப்படலாம்.

அந்தந்த ஆண்டிற்கான ஆணையத்தினால் முன்னுரிமை மின் கட்டணம் எதுவும் நிர்ணயிக்கப்படாதிருக்குமானால், மிகையான மின்உற்பத்தி / பயன்படுத்தப்படாத சேமிக்கப்பட்ட மின்சாரம் அந்த மாத கடைசியில், அந்தந்த நிதியாண்டில் அந்தந்த வகையான அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின்சாரத்திற்கான ஏலவிலை மின்கட்டணத்தின்

75% வீதத்தில் பணமாக்கப்படலாம். நடைமுறை மூலம் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்கட்டணங்கள் காணப்படுமானால், அந்தந்த நிதியாண்டில் எடையிடப்பட்ட சராசரி மின்கட்டணத்தில் 75% செலுத்துகைக்காக பரிசீலனை செய்யப்படும். அண்மையில் காணப்படும் ஏலவிலை மின்கட்டணம் பொறுத்து, இந்திய சூரிய ஆற்றல் எரிசக்தி நிறுவனத்தினால் (SECI) அல்லது வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தினால் அண்மையில் காணப்பட்ட மிகக் குறைந்த ஏலவிலையானது பரிசீலனை செய்யப்படும்.

**17. மின்குறைத்தலுக்கான முன்னுரிமை:**

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி குறைபோனது, காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்உற்பத்திக்கான புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியைக் குறைப்பதற்கான மேலாண்மைக்குரிய ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி செய்யப்படுதல் வேண்டும். எனினும், மின் செலுத்தல் / மின் பகிர்மான அமைப்பு முறையின் தடுப்பு அல்லது பிறவாறான நடவடிக்கையின் பொருட்டான மின் உற்பத்தி குறைத்தலை பொறுத்தமட்டில் அந்தச் சேவையை குறைப்பது தேவைப்படுகையில் பின்வரும் முன்னுரிமை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(அ) முதலில் குறுகிய கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கு மின் உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும் (பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் அல்லாத) அதனைத் தொடர்ந்து, குறுகிய கால பசுமை மின்னாற்றல் வாடிக்கையாளர்களுக்கு மின்உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அடுத்து, நடுத்தர கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கு மின் உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும் (பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் அல்லாத) அதனைத் தொடர்ந்து, நடுத்தர கால பசுமை மின்னாற்றல் வாடிக்கையாளர்களுக்கு மின்உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும்;

(இ) அடுத்து, நீண்ட கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கு மின் உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும் (பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் அல்லாத) அதனைத் தொடர்ந்து, நீண்ட கால பசுமை மின்னாற்றல் வாடிக்கையாளர்களுக்கு மின்உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும்;

வரம்புரையாக, ஒரு வகையினருக்குள், பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் சமமான குறைப்பு முன்னுரிமை உடையவராவர் மற்றும் முன்னடிப்படையில் மின்உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, மின் பகிர்மான உரிமதாரருக்கு இறுதி நிலையாக மின்உற்பத்தி குறைக்கப்படுதல் வேண்டும்.

**18. மின்னளவை:**

(1) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை, 2006 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின்னளவிகளை நிறுவுதல் மற்றும் இயக்குதல்) ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளின்படி மின்உற்பத்தியாளர்கள் முனையில் மற்றும் இடைத்தள முனைகளில் தொடர்பு வசதிகளுடன் இடைத்தள மின்னளவிகள் வழங்கப்படுதல் வேண்டும். மேலும், மின்உற்பத்தியாளர்களுக்கு முதன்மை மற்றும் சோதனை ஆகிய இரண்டு மின்னளவிகளும் வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் மின்நுகர்வோர் தரப்பிலான மின்னளவிகள், அந்தந்த மின்பகிர்மான உரிமம்தாரரின் ஒப்புதலளிக்கப்பட்ட குறிப்பீடுகளின்படி இருத்தல் வேண்டும்.

(2) மின் கட்டமைப்பிற்கான மின்னளவை முனையம் அதோடு கூட இடையிணைப்பு முனையும், அருகிலுள்ள மின் செலுத்தல்/ மின்பகிர்மான உரிமம்தாரரின் துணை நிலையமாக இருத்தல் வேண்டும்.

(3) மேற்சொன்ன மின்னளவிகள், எப்போதும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டுவருதல் வேண்டும், மற்றும் மாநில மின் செலுத்தல் மின்பணி நிறுவனம், மின் பகிர்மான உரிமம்தாரர் அல்லது மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவராலும் ஆய்வு செய்வதற்காக திறந்துவிடப்படுதல் வேண்டும்.

(4) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை மின் உற்பத்தியாளர்கள்/மின் நுகர்வோர்கள் அனைவரும், அவ்வப்போது, திருத்தம் செய்யப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின்னளவிகள் நிறுவுகை மற்றும் இயக்கம்) ஒழுங்குமுறை விதிகள், 2007 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின் கட்டமைப்பு இணைப்பிற்கான தொழில்நுட்ப தரங்கள்) ஒழுங்குமுறை விதிகள், 2020 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின் அமைப்பு முறை இயக்கத்தில் தொடர்பு அமைப்பு முறைக்கான தொழில்நுட்ப தரங்கள்) ஒழுங்குமுறை விதிகள், முதலியவற்றை போன்ற மத்திய மின்சார அதிகார அமைப்பின் பல்வேறு ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்குதல் வேண்டும்.

**19. தொடர்பு வசதிகள்:**

(1) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர், குறியீடற்ற தொடர்பு வசதி / தரவு / ஆணைகள் / தகவல், மின் உற்பத்தியாளர் இடத்திலிருந்து, மாநில ஒருங்கிணைப்பு முகமை (SLDC) துணை மின் சுமை பகிர்ந்தனுப்பு மையம் உண்மையான நேர அடிப்படையில் மற்றும் மின் நுகர்வோர் இடத்திலிருந்து மின் பகிர்ந்தனுப்பு உரிமம்தாரர்களுக்கு, மின்பகிர்தனப்புதல் / SCADA கட்டுப்பாட்டு மையத்திற்கும் / அதிலிருந்தும் விளிம்பற்ற வசதிக்கு அந்த இடத்தில் தொடர்பு அமைப்பு முறையைக் கோருதல் வேண்டும்.

வரம்புரையாக, மின் உற்பத்தியாளர்கள் தரவு கூட்டு மின்திறன் 1 மெகாவாட் மற்றும் அதற்கு மேலும் மற்றும் மின் நுகர்வோரின் ஒப்பந்தம் செய்யப்பட்ட மின்தேவை ஒரு மெகாவாட் மற்றும் அதற்கு மேலும், மின்சார கணக்கீட்டிற்காகவும், உண்மைநிலை மின் கட்டமைப்பு மேலாண்மைக்காகவும், மாநில ஒருங்கிணைப்பு முதன்மையினால் பயன்படுத்தப்படுதல் வேண்டும். புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியாளர்கள் / மின் நுகர்வோரின் மின் உற்பத்தியின் தொகுக்கப்பெற்ற

மின் திறன், ஒப்பந்தம் செய்யப்பட்ட மின் தேவை 1 மெகா வாட்டிற்கும் குறைவாக இருந்து மாநில மின் பகிர்ந்தனுப்பு மையம், 20 ஆம் ஒழுங்குமுறை விதியின்படி பிறப்பிக்கப்பட வேண்டிய விரிவான நடைமுறையின் பொருத்தமான தொடர்பு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய உரிய கால தொடர்பு வசதி மற்றும் தரவு மின் உற்பத்தியாளரால் கிடைக்கத்தக்கதாக செய்யப்படாதிருக்குமானால் மாநில மின் பகிர்ந்தனுப்பு மையம், 15 நாட்கள் கால அறிவிப்பு வழங்கிய பின்பு, மின் உற்பத்தியாளரின் மின்பகிர்தனுப்புகை மற்றும் மாறுபாடு விலக்கத் தீர்விலிருந்து நடைமுறையிலிருந்து வெளியிடுகையில் 10% நீக்கிவிடுமாறு பணிக்கலாம், மற்றும் அத்தகைய மின்உற்பத்தியாளர், மாநில மின்பகிர்ந்தனுப்பு மையத்தினால் வழங்கப்பட்ட அறிவுப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்கள் கழிவுற்ற பின்பு, மின் உற்பத்தியாளர் மொத்த வெளியீடானது, அனுப்புகை மற்றும் மாறுபாடு விலக்கத்தீர்விலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். மாநில மின்பகிர்தனுப்பு மையத்தினால் வழங்கப்பட்ட அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 45 நாட்கள் கழிவுற்ற பின்பு அந்த மின் உற்பத்தியாளர் உண்மை கால தொடர்பு வசதிக்கு ஏற்பாடு செய்யாதிருப்பாரானால், ஆணையத்திற்கு உரியவாறு தகவல் அளித்த பின்பு, மத்திய மின்சார அதிகார அமைப்பு ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளின் படி, மாநில மின்பகிர்ந்தனுப்பு மையத்தினால் மேலுமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**20. விரிவான நடைமுறை:**

மாநில மின்பகிர்ந்தனுப்பு மையம் உரித்தமுடையவர்களுடன் உரியவாறு கலந்தாலோசித்து இந்த ஒழுங்குமுறைவிதிகள் அறிவிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் விரிவான நடைமுறையை பிறப்பித்தல் வேண்டும். அது மாநில மின்பகிர்தனுப்பு மையத்திடமிருந்து பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் தனியாக ஆணையத்தினால் ஒப்புதளிக்கப்படும். விரிவான நடைமுறையானது, 2022 ஆம் ஆண்டு மின்சார அமைச்சகத்தின் மின்சக்தி (பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை மூலம் புதுப்பிக்கத்தக்க மின்னாற்றலை ஊக்குவிக்கும்) இந்திய மின் கட்டமைப்பு கட்டுப்பாட்டாளரால் (NLDC) தயாரிக்கப்பட்ட பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வழங்குவதற்கான நடைமுறைக்கு ஒத்தவாறு இருக்கலாம். விரிவான நடைமுறையானது ஏனையவற்றுக்கிடையே பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையை விண்ணப்பம், தகுதியுடைய அளவுகோல், விண்ணப்பத்தின் செயல்முறை திறந்த நுழைவுரிமைக்கு ஒப்புதல் வழங்குதல், பசுமை மின்னாற்றல் விண்ணப்பங்களின் செயல்முறைக்கான கால அளவு, பட்டியலிடல் முதலியவற்றை பணிந்தனுப்புதல் உள்ளடங்களான பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கான நடைமுறை;

(ii) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை நடவடிக்கைகளுக்கு ஒரு நாள் விண்ணப்பிப்பதற்கான நடைமுறை;

(iii) மாநில மின்பகிர்ந்தனுப்பு மையம், மின்பணி நிறுவனம் மின் பகிர்மான உரிமம்தாரர்கள் முதலியோரின் பங்குகள் மற்றும் பொறுப்புகள்;

(iv) பதிவு செய்வதற்கான நிகழ்நிலை விண்ணப்ப படிவம், நீண்ட கால நடுத்தர கால மற்றும் குறுகிய காலத்திற்கான பசுமை மின்னாற்றல் மாநிலத்திற்குள்/ மாநிலத்திற்கிடையில் திறந்த நுழைவுரிமைக்கான விண்ணப்பம்;

(v) சம்பந்தப்பட்ட உரிமம்தாரருடன் நீண்ட கால அளவு, நடுத்தர கால அளவு மற்றும் குறுகிய கால அளவு உடன்படிக்கைகள்;

(vi) மாநிலத்திற்குள் மற்றும் மாநிலத்திற்கு வெளியேயான மின்னாற்றல் கணக்கீடு நடவடிக்கைகள்;

(vii) பல்வேறு மேலாண்மை தகவல் அமைப்பு அறிக்கைகளின் வடிவங்கள்;

(viii) பல்வேறு கட்டண விவரங்கள்;

(ix) 19 ஆம் ஒழுங்குமுறை விதியின்படி மின் உற்பத்தியாளர்கள் / மின் நுகர்வோர் தேவையான தொடர்பு;

(x) பசுமை மின்னாற்றல் திறந்து நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கான பணச் செலுத்துகைக்கான பிணை செயலமைவு திட்டம், பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தத் தவறுதல், பசுமை மின்னாற்றல் திறந்து நுழைவுரிமை வாடிக்கையாளர்களால் திறந்த நுழைவுரிமை மின்திறனைப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்தாதிருத்தல், நிகழ்நிலை விண்ணப்பம் தாக்கல் செய்தல் முதலியன;

**21. தகவல் அமைப்பு முறை:**

(1) மாநில மின் பகிர்ந்தனுப்பு மையம், பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை தகவல் என்று தலைப்பிடப்பட்ட தனிப்பட்ட இணையப் பக்கத்தில் பின்வரும் தகவலை போடுதல் மற்றும் பின்வரும் தகவல் அடங்கிய மாதாந்தர மற்றும் ஆண்டு அறிக்கையும் கூட வெளியிடுதல் வேண்டும்.

(i) திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் நீண்டகால / நடுத்தர கால / குறுகிய கால நிலை அறிக்கை;

(ii) நெருக்கடியான நேர்வில், ஏலத்திற்கான அடிநிலை விலை;

(iii) அதி உயர் மின்னழுத்தத்தின் பேரில் உச்ச நிலை மின்சுமைபாய்வு;

(iv) மாதாந்திர அடிப்படையில் உரிமம்தாரர்களால் நிர்ணயிக்கப்பட்டவாறு மின் செலுத்தல் அமைப்பு முறையில் ஏற்படும் சராசரி இழப்பு குறித்தத் தகவல் மற்றும் ஆணையம் தன்னுடைய தொடர்பான மின் கட்டண ஆணையில் நிர்ணயிக்கப்பட்ட மின் பகிர்மான இழப்பு பொறுத்த தகவல்;

(2) தன்னுடைய நிலையில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்தின் பேரில், நாளது தேதி வரையிலான, அந்தந்த தகவலை பதிவிடுதல் வேண்டும்;

(3) முந்திய அறிக்கை அனைத்தும் இணைய ஆவண காப்பகத்தில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்;

(4) மாநில மேன் பகிர்ந்தனுப்பு மையம், மேற்சொன்ன தகவலை, இந்த ஒழுங்குமுறைவிதிகளின் அறிவிக்கைத் தேதியிலிருந்து ஒரு மாத கால அளவிற்குள், தன்னுடைய வலைதளப் பக்கத்தில் ஏற்றம் செய்ய வேண்டும்;

(5) மின்செலுத்தல் / மின்பகிர்ந்தனுப்புதல் உரிமம்தாரர், மாதாந்திர அறிக்கையை ஆணையத்திற்கு பின்வரும் படிவத்தில் அல்லது பிற படிவத்தில் ஆணையத்தினால் திரும்பத் திரும்ப பணிக்கப்படுகிரவாறு அளித்தல் வேண்டும்.

| *வரிசை எண்* | *பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை / மின்செலுத்தல் வாடிக்கையாளரின் பெயர்/முகவரி* | *மின் உட்செலுத்தல் முனையம்* | *மின் உள்ளிழுப்பு முனையம்* | *அனுமதிக்கப்பட்ட மின்திறன் (மெகா வாட்டில்)* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

22. பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவு உரிமை வாடிக்கையாளர்கள் மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு, மின் வளங்கள் விதித்தொகுப்பு மற்றும் பிற விதித்தொகுப்புகள் அனைத்தும் மற்றும் செந்தரங்கள், விளக்கத்தீர்வு அமைப்புமுறை ஒழுங்குமுறை விதிகள் மற்றும் அவ்வப்போது பொருந்தக்கூடிய ஆணையத்தின் பிற ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் ஆணைகள் முதலியவற்றை கடைபிடித்தல் வேண்டும்.

**23. மாநிலத்திற்கிடையேயான நடவடிக்கையின் செயற்பாடு:**

(1) மின் உற்பத்தியாளர் மாநிலத்திற்கிடையே மின் செலுத்துதல் அமைப்புமுறை (ISTS) மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் தமிழ்நாடு மாநிலத்தில் அல்லது பிற மாநிலத்தில் இருக்கின்ற போது, மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் இருக்கின்ற நேரடியாக மின் வழங்குகிறவர்களும், மாநிலத்துக்கிடையே மின்செலுத்தல் அமைப்பு/மின் கட்டமைப்புடன் மட்டுமே இணைப்பு பெற்றவர்களுமான மின் நுகர்வோர் ஆனால், மாநில மின் செலுத்தல் மின்னமைப்பு மற்றும்/அல்லது மாநிலத்தின் மின் பகிர்மான அமைப்புடன் இணைக்கப்படாதிருப்பார்களேயானால், அந்த பரிவர்த்தனைகளுக்கு, மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒழுங்குமுறை விதிகளுடன் சேர்த்து படிக்கப்படும் மத்திய மின்சக்தி அமைச்சக விதிகள் பொருந்தும்.

(2) பசுமை மின்னாற்றல் மின் உற்பத்தியாளர், ஒன்று தமிழ்நாடு மாநிலத்தில் அல்லது தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே இருந்து வந்து மாநிலத்திற்கிடையே மின் செலுத்தல் அமைப்பு மின் கட்டமைப்புடன் மின்னிணைப்பு பெற்று மற்றும் மாநிலத்திற்குள் மின் செலுத்தல் மற்றும்/அல்லது தமிழ்நாடு மாநிலத்தில் மின் பகிர்மான அமைப்பு மின் இணைப்பு பெற்றுள்ள மின் நுகர்வோருக்கு மின் வழங்கல் செய்யப்படுகிற போது, அத்தகைய நேர்வில், அந்த நடிவடிக்கைகள், பொருந்தக்கூடிய மத்திய மின்சார ஒழுங்குமுறைவிதிகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் மத்திய மின்சக்தி அமைச்சகத்தின் (MOP) விதிகளின்படி கட்டுப்படுதல் வேண்டும்.

**24. பூசல் தொடர்பான தீர்மானம்:**

(1) பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை தொடர்பான பூசல்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட மாநில ஒருங்கிணைப்பு முகமையிடம் செய்யப்படுதல் வேண்டும். அதாவது, நேருவுக்கேற்ப, மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையத்திடம் குறையைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்யலாம்.

(2) திறந்த நுழைவுரிமைக்கான விண்ணப்பம் எதுவும், விண்ணப்பதாரருக்கு இந்த விஷயத்தில் கேட்கப்படுவதுக்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்பட்டாலன்றி, மறுக்கப்படுதல் ஆகாது மற்றும் திறந்த நுழைவுரிமையை மறுக்கும் ஆணைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்பு முகமையினால், விளக்கமாகத் தெளிவு படுகின்ற ஆணையாக இருத்தல் வேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்பு முகமையின் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு அந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்கள் கால அளவிற்குள் செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஆணையம், மூன்று மாதங்களுக்குள் அந்த மேல்முறையீட்டினை முடிவு செய்தல் வேண்டும்.

**25. உத்தரவுகள் பிறப்பிப்பதற்குள்ள அதிகாரம்:**

ஆணையம், இந்த ஒழுங்குமுறை விதிகளைச் செயல்படுத்துவதற்காக உரியதெனக் கருதும் உத்தரவுகள் மற்றும் ஆணைகளை அவ்வப்போது பிறப்பிக்கலாம்.

**26. ஒழுங்குமுறை விதிகளைத் தளர்த்துவதற்குள்ள அதிகாரம்:**

ஆணையம், எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, பொதுவான மற்றும் சிறப்பு ஆணை வாயிலாக அநேகமாக பாதிக்கப்படும் தரப்பினர்களுக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பு நல்கிய பின்பு, தாமாக முற்பட்டு அல்லது சம்பந்தப்பட்ட உரித்தமுடையவர்களால் தன்முன்பு செய்யப்பட்ட விண்ணபத்தின் பேரில் இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளை தளர்த்தலாம்.

**27. ஒழுங்குமுறைவிதிகளை திருத்தம் செய்வதற்குள்ள அதிகாரம்:**

ஆணையம், அவ்வப்போது, இந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகள் எவற்றிலும் சேர்க்கலாம், மாறுதல் செய்யலாம், மாற்றலாம், நிறுத்தி வைக்கலாம், மாற்றமை செய்யலாம், திருத்தம் செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்.

**28. காப்புரைக் கூறுகள்:**

(1) இந்த ஒழுங்குமுறை விதிகளில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு அல்லாமல் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டமைப்பு இணைத்திறம் மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை) ஒழுங்குமுறை விதிகள் மற்றும் அதில் செய்யப்படும் பிந்திய திருத்தங்கள் அனைத்தும் குறிப்பிட்ட அளாவுகைக்கு மட்டுமே நீக்களவு செய்யப்பட்டு நிற்கும் இந்த ஒழுங்குமுறை விதிகளில் உருவாக்கப்பட்ட வகைமுறைகள் மற்றும் பசுமை மின்னாற்றலைப் பயன்படுத்துவதற்காக திறந்த நுழைவுரிமை குறித்து அவ்வப்போது திருத்தம் செய்யப்படலாம்.

(2) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டமைப்பு இணைத்திறம் மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை) ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகள் இந்த ஒழுங்குமுறை விதிகளின் படியான வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அல்லது இந்த ஒழுங்குமுறை விதிகளின்படி உள்ளடக்கப்படாதவை இந்த ஒழுங்குமுறை விதிளின் பகுதியாகத் தகுந்த மாறுதல்களுடன் கூட பொருந்தக்கூடியதாகும்.

(3) 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டமைப்பு இணைத்திறம் மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை) ஒழுங்குமுறை விதிகளின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது எடுக்கப்படுமாறு வேண்டுறுத்தப்பட்ட அல்லது செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும் எதுவும் அல்லது வழங்கப்பட்ட அனுமதி எதுவும் எடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் அல்லது எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் அல்லது முறையாவணம் எதுவும் அல்லது அதன்படி வழங்கப்பட்ட உத்தரவு எதுவும், மற்றும் ஆணையத்தினால் அதன் பேரில் பிறப்பிக்கப்பட்ட திருத்தங்கள் எவையும், இந்த ஒழுங்குமுறை விதிகளின்படி வகைமுறைகளுடன் முரணாக இல்லாதிருக்கும் அளவிற்கு, இந்த ஒழுங்குமுறை விதிகளின் நேரிணையான வகைமுறைகளின் படி செய்யப்பட்டுள்ளதாக அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்

(4) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டமைப்பு இணைத்திறம் மற்றும் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை) ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளின்படி மற்றும் அதன்பேரில் பிறப்பிக்கப்பட்ட திருத்தங்களின் படி வழங்கப்பட்ட திறந்த நுழைவுரிமை செயற்பாட்டின் அளவுக்கு, அந்த ஒழுங்குமுறை விதிகளின்படி வழங்கப்பட்ட திறந்த நுழைவுரிமை கால அளவு வரையில், அந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளின்படி கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**29. இடர்பாடுகளை நீக்குவதற்குள்ள அதிகாரம்:**

இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு செயல் விளைவு அளிக்கையில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், ஆணையம் ஆணை வாயிலாக இடர்ப்பாட்டினை நீக்குவதற்கு அவசியமானதென்று தோன்றலாகும். இந்தச் சட்டத்தின் மற்றும் இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைக்கு முரணாக இராத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

(ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை 600 032,
2026 ஜனவரி 13.

**எஸ். ஜான் சுந்தரராஜ்,**
*செயலாளர் (பொறுப்பு),*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை (GEOA)—க்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒழுங்குமுறைவிதிகள் வழிகாட்டும் காரணம் மற்றும் சூழ்நிலைகளை தெளிவுபடுத்துகின்ற விளக்கக் குறிப்பு**

1. இந்திய அரசு (GOI) 2070 ஆம் ஆண்டு கார்பன் தொடர்பாக நடுநிலை வசிக்கும் நாடாக அறிக்க பொருத்தமான இலச்சிய இலக்கினை அமைத்துள்ளது. கார்பன் தொடர்பாக நடுநிலை வகிக்கும் பொருட்டு, இந்திய அரசு, 2030ஆம் ஆண்டு புதுப்பிக்கத்தக்க மின்திறன் 500 கெகா வாட் (GW) நிறுவுவதற்கான இலக்கினை ஏற்பாடு செய்துள்ளது. இவ்விதமாக நாடு முழுவதும் திறந்த நுழைவுரிமை நடைமுறையை ஒழுங்குபடுத்தவும், நாடு முழுமைக்கும் ஒற்றை சாரை முறையில் இந்தத் திட்டத்தினை செயற்படுத்த திறந்த நுழைவுரிமை மூலமாக புதுப்பிக்கத்தக்க மின்சக்தி பயன்பாட்டினை ஊக்குவிப்பதன் பொருட்டு 2022 ஆம் ஆண்டு மின்சார (பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை மூலமாக புதுப்பிக்கத்தக்க மின்சக்கி ஊக்குவித்தல்) விதிகளின்படி மத்திய மின்சக்தி அமைச்சகத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 176(2)(z) பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 176(1) ஆம் பிரிவின் மூலம் மேவிநிற்கின்ற அதிகாரங்களைச் செலுத்துகையில், புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை ஊக்குவிக்கவும் அதன் நிறுவுகையை எளிதாகக்கும் பொருட்டும், அந்தத் திட்டத்தினை செயற்படுத்த இதற்குக் கூடுதலாக மின்சக்தி அமைச்சக ஒழுங்குமுறை மன்றத்திற்கு வழிகாட்டியுள்ளது. திறந்த நுழைவுரிமைக் கட்டணங்களை கணக்கிடுவதற்காக நெறிமுறையின் பேரில் மாதிரி ஒழுங்குமுறை விதிகளை தயார் செய்வதற்கு மேலேயுள்ள விதிகளின் 12ஆம் விதியினைக் காண்க. மேலும், ஒழுங்கு முறையாளர்கள் மன்றத்துடன் (FOR) கலந்தாய்வு செய்து பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையின் நிர்வாகம் மற்றும் அதனை வழங்குவதற்குரிய பொதுவான படிவத்தினை தயார் செய்வதற்கு, மத்திய ஒருங்கிணைப்பு முகமையினை மின்சக்தி அமைச்சக விதிகளின் மேற்சொன்ன 7 ஆம் விதி கட்டாயப்படுத்துகிறது.

2. அவ்வாறே, ஒழுங்குமுறையாளர்கள் மன்றம் திறந்த நுழைவுரிமை கட்டணங்களையும் மற்றும் பசுமை மின்னாற்றல் நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கான வங்கிக் கட்டணங்களையும் கணக்கிடுவதற்கான நெறிமுறையின் பேரில், மாதிரி ஒழுங்குமுறை விதிகளை வனைந்துள்ளது மற்றும் இந்திய மின்கட்டமைப்பு கட்டுப்பாடுகள் அமைப்பு (NLDC), பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கான நடைமுறையினை கூட தயார் செய்துள்ளது. ஒழுங்குமுறையாளர்கள் மன்றத்தின் மாதிரி ஒழுங்குமுறை விதிகளினால் அறிவுறுத்தப்பட்ட (சேமிக்கப்பட்ட மின்னாற்றலின் 8% என்ற வகையில்) மின் சேமிப்பு வைப்பகக் கட்டணங்களை அந்த ஒதுங்குமுறை விதி ஏற்றுக் கொண்டுள்ளது.

3. மின்சக்தி அமைச்சகத்தினால் வனையப்பட்ட விதி, பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கு ஒப்பந்தப்படியான மின் தேவை மற்றும் ஒப்பளிக்கப்பட்ட மின்சுமை 100 கிலோவாட் மற்றும் அதற்கு மேலும் கொண்டுள்ள மின்நுகர்வோர் அனைவருக்கும் அனுமதியளிப்பதற்கு குறிப்புரைத்துள்ளது மற்றும் பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமையின்படி மின்சாரம் எடுக்கும் சுயஉபயோக மின் நுகர்வோருக்கு அத்தகைய வரம்பு எதுவும் இல்லை. புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் வளங்களையும் திறந்து நுழைரிமையையும் ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகும். நிலக்கரி எரிபொருள் அடிப்படையிலான மின்சக்தி ஆதாரங்கள் உள்ளடங்களாக ஒப்பந்த மின்தேவை 63 கிலோ வாட் மற்றும் அதற்கு மேலும் உடைய அதிஉயரழுத்த (EHT/HT) உயரழுத்த மின்நுகர்வோர் அனைவருக்கும் தற்போது திறந்த நுழைவுரிமை இயல்பாக அனுமதியளிக்கப்படுகிறது மற்றும் அதேநிலை சிறப்புற செயற்படுகிறது. இதனை நோக்குகையில், மொத்த உரித்தமுடையவர்களின் நலனுக்காக பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகளில் அதனையே ஏற்றுக் கொள்வதற்கு ஆணையம் முடிவு செய்துள்ளது.

4. தமிழ்நாட்டிற்குள் உள்ள புதுப்பிக்கத்தக்க மின்சார மின்உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு மற்றும் மாநிலங்களுக்கிடையேயான மின்செலுத்தல் நடவடிக்கைகளில் மின்பரிமாற்ற தடைகளை கருத்தில் கொண்டு, மின் செலுத்துதல் மற்றும் மாநிலத்திற்குள் புதுப்பிக்கத்தக்க மின்சார நடவடிக்கைக்காக மட்டுமே மின்சாரம் கொண்டு செல்லுதல், மின்உற்பத்தித் திட்டமிடல் மற்றும் அமைப்புமுறை இயக்கம் குறுக்கு உதவித்தொகை, உபரிக்கட்டணம் முதலியவற்றிற்கான சலுகைக் கட்டணங்களை, இது நீட்டிப்பதற்கு முடிவு செய்துள்ளது. மற்றும் மாநிலங்களுக்கிடையே மின்பரிமாற்றம் புதுப்பிக்கத்தக்க மின்சார நடவடிக்கை / மின்பரிமாற்றம் ஆகியவற்றை பொருத்தவரை அத்தகைய சலுகைக் கட்டணங்கள் நீட்டிக்கப்படுதலாகாது.

5. காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்சாரத்திற்கான, ஆணையத்தின் முந்தைய மின்கட்டண ஆனைகளின்படி, மாறுபட்ட விலக்கத்தீர்வு அமைப்புமுறை செயற்படுத்தப்படும்போது, பட்டியலிடல் கால அளவின்போது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உரிமம்தாரர் மின்உற்பத்தியை பதிவு செய்தல் வேண்டும். குறிப்பிட்ட கால இடைவெளிகளிலான சரிக்கட்டுதல் பட்டியலிடல் கால அளவிற்காகச் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் மின்பகிர்மான உரிமதாரர் வழங்கப்பட்ட மொத்த மின்சாரத்திற்கான பட்டியல் பணத்தைப் பெற்று அளிப்பார். மின்பகிர்மான உரிமம்தாரரிடமிருந்து மிகையாக நுகரப்பட்ட மின்சாரத்திற்காக அவ்வப்போது மின் நுகர்வோரால் முடிவு செய்யப்படும் வகையிலான மின் கட்டணம் பொருந்தக்கூடிய மின்கட்டண வீதங்கள் நூற்று இருப்பத்தைந்து (125%) விழுக்காட்டிற்கு மிகைப்படுத்தல் ஆகாது. தற்போது ஆணையம். 01—04—2024— லிருந்து நடைமுறைவருமாறு மாறுபட்ட விலக்கத் தீர்வு அமைப்பு முறையை செயற்படுத்தி உள்ள போது, பட்டியலிடல் கால அளவின்போது, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பதிவு செய்வதற்காகவும் மற்றும் பட்டியலிடல் கால அளவின் போது, மின்உற்பத்தியையும், மின்நுகர்வினையும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மின்சாரத்தை சரிகட்டுதலுக்காகவும், இந்த வகைமுறையைச் செய்வதற்கு ஆணையம் முடிவுசெய்து மின் கட்டமைப்பு இயக்குபவர்கள் துல்லியமான உண்மையான தகவல் ஆகியவற்றோடு மின்கட்டமைப்பின் நிலைப்பாடு, சிக்கனத்திறன், பாதுகாப்பான இயக்கங்கள் ஆகியவை குறித்து அனுப்புகை நீங்கலாக வெளிப்படுவதற்குரிய வழிகாட்டுகையின் உண்மைநிலைத் தரவு மாற்றத்திற்கு இணைங்காதிருத்தல். மின்உற்பத்தியாளர் தன்னுடைய வெளிப்படுகை அல்லது கிடைக்கக்கூடியவைப் பற்றி உரிய காலத்தில் துல்லியமான தரவுகளை அளிக்கத் தவறுவாரானல், மின்கட்டமைப்பு இயக்குபவர் (SLDC) அனுப்புகை பட்டியலிருந்து நீக்கப்படுவதற்கு வழிவகுக்கும் மின்கட்டமைப்பிற்கு அந்த யூனிட் மின்சாரத்தை பாதுகாப்புக்காகவும், நம்பத்தகுந்ததாகவும் இயலாது.

**6.** மேலேயுள்ளவற்றின் காரணமாக, ஆணையம் 2022 ஆம் ஆண்டு மின்சக்தியை அமைச்சக மின்சார (பசுமை மின்னாற்றல் திறந்த நுழைவுரிமை மூலம் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை ஊக்குவிக்கும்) விதிகளின் வகைமுறைகளை பொருத்தமாக ஒருங்கிணைத்து சேர்த்து ஆணையம் புதிய 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (பசுமைமின்னாற்றல் திறந்த நுழைவுரிமைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) ஒழுங்குமுறைவிதிகளை வனைவது பொருத்தமானதாகும் என்று முடிவு செய்கிறது**.**

(ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை – **600 032**,
**2026** ஜனவரி **13.**

**எஸ். ஜான் சுந்தரராஜ்,**
*செயலாளர் (பொறுப்பு),*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU